Ceiling on stock of local grains.

* 310 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to fix ceiling on grain stock holdings; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இப்பொருள் குறித்துப் பரிசீலிக்கப்பட்டு, தற்போதைக்குத் தள்ளி வைக்கப் பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இதற்கு உச்சவரம்பு இல்லாது போனால் பதுக்கலுக்கும், அதன்மூலம் விலையேற்றத் திற்கும், கள்ளச்சந்தைக்கும் வழிவகுப்பதாக இருக்கிறது. எனவே அதற்கு உச்சவரம்பு நிர்ணயிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இப் பொழுதிருக்கும் சட்டப்படியே ஒருவர் 40 குவிண்டாலுக்கு மேல் நெல்லோ அல்லது 25 குவிண்டாலுக்கு மேல் அரிசியோ வைத் திருந்தால் ஒரு வார காலத்திற்குள் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றிருக்கிறது. விவசாயிகள் எவ்வளவு வைத்துக் கொள்ளலாம் என்பதுபற்றி உச்சவரம்பு கொண்டுவரலாம் என்று யோசித்தோம். அது இப்பொழுது தேவையில்லை என்று அரசு விட்டு வைத்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த உச்சவரம்பில் யாராவது இதுவரையில் பிடிபட்டிருக்கிறார்களா? 40 குவிண்டா லுக்கு மேல் நெல்லோ, 25 குவிண்டாலுக்கு மேல் அரிசியோ வைத் திருக்கக் கூடாது என்ற சட்டப்படி இதுவரை ஏதாவது குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவா? அதன் மேல் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏராளமாக இப்படிக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் சமீபத்தில் பிடித்திருக்கிறார்கள். அப்படி அதிகமாக வைத்திருப்பவர்களில் விவரம் தெரியாமல் வைத்திருப்பார்கள் என்று அங்குள்ள மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர் கருதினால் அவர்களிடம் உள்ள நெல்லை

1972 ஆகஸ்ட் 24]

அரசாங்கம் 50 சதவிகிதம் கொள்முதல் செய்கிறது. வேண்டுமென்றே பதுக்கி வைத்திருந்தால் அரசாங்கம் அவர்கள்மீது வழக்கும் தொடரும். இப்பொழுது வழக்குத் தொடரவில்லை. எங்கெங்கு அதிகமாக இருக்கிறதோ அங்கே அரசாங்கம் கொள்முதல் செய்திருக்கிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, மத்திய அரசின் குறிப்பு ஒன்று ஒருவர் 8 கிலோ அரிசிதான் சாப்பிடலாம் என்று இருக்கிறது. அந்த அளவிற்கு 3 கிலோ வைத்துக் கொள்ளலாம் என்ற அளவிலே உச்சவரம்பு நிர்ணயிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதுபற்றி எனக்குத் தகவல் இல்லை.

ரெட்டையாபாளையத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலைகள்

* 311 வினா—திரு. [redacted] பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி வட்டம், ரெட்டையாபாளையம் கிராமத்தில் சிலைகள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், மேற்படி சிலைகள் எங்கெங்கே ஒப்படைக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) அறந்தாங்கி வட்டம், ரெடைபாளையம் என்ற கிராமத்தில்தான் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.

(இ) அறந்தாங்கி வட்டாட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, என்னென்ன சிலைகள் கண்டெடுக்கப்பட்டன என்கிற விவரத்தை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, என்னென்ன சிலைகள் என்ற முழு விவரம் என்னிடத்தில் இல்லை. 7 சிலைகளும், 1 பாதரட்சை கட்டையும் வைக்கப்பட்டிருந்ததாகவும். 4 கைகள் உள்ள சிலையும், இன்னும் சில சாமான்களும் காணாமல் போய். அறந்தாங்கி தாசில்தாருக்கு அறிவிக்கப்பட்டு,